1986 நவம்பர் 20]

6. எந்தத் திட்டத்திற்காக மானியம் கேட்கிறார்களோ அத்திட்டத்தை நிறைவேற்ற போதுமான ஊழியர்களையும் வசதிகளையும் மற்றும் நிர்வாக திறமையுடையவர்களாகவும் இருக்க வேண்டும். அரசிடமிருந்து பெறுகின்ற மானியத்தைத் தவிர கூடுதலாக செலவு ஏற்பட்டாலும் அதை ஏற்று செலவு செய்யும் வகையில் நிர்வாகத்தை நடத்தும் அளவுக்கு நிறுவனம் இருக்க வேண்டும். தேவைப்படின் அவர்கள் சொந்தப் பொறுப்பில் நிறுவனத்தை நடத்தவும் தயாராக இருக்க வேண்டும். நிறுவனத்தை நேரில் சென்று பார்வையிட்டு மேற்கண்ட நிபந்தனைகள் எல்லாம் நிறைவேற்றப்பட்டிருந்தால் மாவட்ட சமூக நல அதிகாரியின் சான்று அளிக்கப்பட்டு அதற்கு பிறகு தான் மானியம் வழங்கப்படுகிறது.

டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனாதை இல்லங்களின் மூலமாக குழந்தைகள் வெளிநாடுகளுக்கு கடத்தப்படுகிறார்கள் என்று புகார் வந்திருக்கிறதே, அதுபற்றி அரசுக்கு தகவல் வந்துள்ளதா? இது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? அனாதை இல்லங்களுக்கு வழங்கப்படும் மானியங்கள் முறையாக செலவு செய்யப்படுகின்றனவா என்று கண்டறிய சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு ஒன்றை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசின் அங்கீகாரம் பெற்ற சமூக நல நிறுவனங்களின் மூலமாக குழந்தைகள் வெளிநாடுகளுக்கு கடத்தப்படுவதாக எந்தத் தகவலும் அரசுக்கு வரவில்லை. அடுத்து, உதவிப் பெறும் சமூகத் தொண்டு நிறுவனங்கள் முறையாக செயல்படுகின்றனவா என்று அரசு அதிகாரிகள் ஒவ்வோர் ஆண்டும் நேரில் சென்று பார்வையிட்டு அதற்குரிய சான்றிதழை வழங்குகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கேளிக்கை வரிச் சட்டம்.

114—(*வினா எண். 8521) திரு. செ. செம்மலை: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கேளிக்கை வரிச் சட்டத்தின்கீழ் கேளிக்கை வரி ஏய்ப்பவர்களைப் பற்றி தகவல் கொடுப்பவர்களுக்கு சன்மானம் வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், 1984-85-ம் ஆண்டு எத்தனை பேருக்கு அப்படிப்பட்ட சன்மானம் வழங்கப்பட்டது?

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கேளிக்கை வரிச் சட்டத்தின்கீழ் வரி ஏய்ப்பு செய்பவர்களைப்பற்றித் தகவல் கொடுப்பவர்களுக்கு சன்மானம் வழங்கும் திட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது.

(ஆ) 1984–85ஆம் ஆண்டில் சன்மானம் எவருக்கும் வழங்கப்படவில்லை.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேளிக்கை வரிச் சட்டத்தின்கீழ் கேளிக்கை வரி ஏய்ப்பவர்களைப் பற்றி தகவல் கொடுப்பவர்களுக்கு சன்மானம் வழங்கும் திட்டம் நடைமுறையில் இருந்தும் யாருக்கும் அப்படி பரிசுத் தொகை வழங்கப்படவில்லையென்று சொன்னால், யாரும் அப்படி தகவல் கொடுக்க முன் வரவில்லையா ? ஒரு வேவை தகவல் கொடுப்பவர்களுக்கு தகுந்த பாதுகாப்பு இல்லையென்ற அச்சம்தான் அதற்குக் காரணமா ? இல்லை இதுபற்றி அதிகமாக விளம்பரம் செய்யப்படவில்லையா? அப்படியென்றால் தகவல் கொடுப்பவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கவும், நல்லமுறையில் எல்லோருக்கும் தெரியும் வகையில் விளம்பரப் படுத்தவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1979 ஆம் ஆண்டு இத்திட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. வரி ஏய்ப்பு செய்பவர்களைப் பற்றி தகவல் கொடுப்பவர்கள் இருந்தாலும்கூட அவர்களுடைய உண்மையான முகவரி, சரியான கையெழுத்து எல்லாம் அதில் இருப்பதில்லை. தகவல் கொடுத்தவர் யார் என்று தெரிய முடிவதில்லை. இருப்பினும் புகார் அடிப்படையிலும், அன்றாடம் அலுவல் என்கிற அடிப்படையிலும் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் தியேட்டர்களில் திடீரென்று சோதனையிடும்போது வரி ஏய்ப்பு கண்டு பிடிக்கப்பட்டு தண்டனைகளும் வழங்கப்பட்டுள்ளன. நெஞ்சுரம் வாய்ந்தவர்கள் வரி ஏய்ப்புப் பற்றித் தகவல் தந்தால் அவர்களுக்கு தகுந்த சன்மானம் தரப்படும் என்று ஏற்கெனவே அரசு அறிவித்திருக்கிறது. அதுமட்டுமல்ல, வரி ஏய்ப்பவர்களைப் பற்றி தகவல் கொடுத்து அதன்மூலம் சன்மானம் பெறும் திட்டத்தை பலர் பயன்படுத்தி பலனும் அடைந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10–00)

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984–85, 1985–86 ஆம் ஆண்டுகளில் இத்தகைய வரி ஏய்ப்பை ஏதோ ஒருவகையில் கண்டு பிடித்ததன் காரணமாக அரசுக்குக் கிடைத்த வருமானம் எவ்வளவு என்ற அந்த விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

1986 நவம்பர் 20]

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் இல்லை. இருந்தாலும் கூட, வரி ஏய்ப்பு பற்றி நம்முடைய அரசுக்கு துப்பு கொடுத்தவர்கள் மொத்தம் 12 பேர். 1981 ஆம் ஆண்டில் 2 பேர். அதிலே ஒரு வழக்கில், அரசாங்கத்திற்கு இந்த வருவாய்தான் கிடைக்கும், வரி விதிப்பின் மூலம் இவ்வளவு கிடைக்கிறது என்பதைக் கணக்கில் கொண்டு பத்து விழுக்காடு என்ற அளவில் ஒருவருக்குப் பணம் வழங்கப்பட்டு விட்டது. இன்னொரு வழக்கு நிலுவையில் இருக்கிறது. இந்த நிலுவையில் இருக்கிற வழக்குக்கு துப்பு கொடுத்தவருக்காக அவர்களை ஊக்கப்படுத்துகின்ற வகையில் 500 ரூபாய் முதல் கட்டமாக வழங்கப்பட்டு இருக்கிறது. முடிவுபெற்ற வழக்கிற்கு ரூ. 4,091 வழங்கப்பட்டு இருக்கிறது. 1982 ஆம் ஆண்டு இரண்டு பேர்கள்—ரூ. 39,602 நமக்கு வரி கிடைத்திருக்கிறது என்ற அந்த அடிப்படையில், துப்பு தந்த ஒருவருக்கு ரூ. 3,960 வழங்கப்பட்டிருக்கிறது; இன்னொருவருடைய வழக்கு நிலுவையில் இருக்கிறது. அதற்கு 250 ரூபாய் ஊக்கத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. 1983 ஆம் ஆண்டு வழக்கு, துப்பு கொடுக்கப்பட்ட வழக்கு, முடிவெடுக்கப்பட்டு அரசாங்கத்திற்கு 14,400 ரூபாய் வரி வந்திருக்கிறது. துப்பு கொடுத்தவருக்கு 1,440 ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. 1984 ஆம் ஆண்டு 3 பேர்கள் அந்தத் துப்பு தந்திருக்கிறார்கள். ஒரு வழக்கு முடிவு செய்யப்பட்டு அரசாங்கத்திற்கு 20,821 ரூபாய் வரியாக வந்திருக்கிறது. துப்பு தந்தவருக்கு 2,082 ரூபாய் தரப்பட்டிருக்கிறது. மற்ற 3 வழக்குகள் நிலுவையிலே இருக்கிறது. அவர்களுக்கு முறையே ரூ. 2,250-ம், ரூ. 2,500-ம், ரூ. 450-ம் ஆக முதல் கட்டமாக ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டிருக்கிறது. 1985 ஆம் ஆண்டு 3 பேர்கள் துப்பு தந்திருக்கிறார்கள். ஊக்கத் தொகையாக அவர்களுக்கு 2,000 ரூபாயும், 2,500 ரூபாயும், 5,000 ரூபாயும் வழங்கப்பட்டிருக்கிறது. 1986 ஆம் ஆண்டு ஒருவர் ஒரு வழக்கில் துப்பு தந்திருக்கிறார். அவருக்கு ஊக்கத் தொகையாக 100 ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 115 முதல் 118 முடிய மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப் பெறுகின்றன.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]